படிவம் எண் 15எச்

[பிரிவு 197ஏ(1), 197ஏ(1ஏ) மற்றும் விதி 29சி பாருங்கள்]

**வரிக் கழிவு இல்லாமல் குறிப்பிட்ட வருவாய்க்கு உரிமை கோரும் அறுபது வயது அல்லது அதற்கு அதிக வயதுள்ள ஒரு தனிநபர் பிரிவு 197ஏ(1சி)-யின் கீழாகச் செய்ய வேண்டிய அறிவிப்பு**

**பாகம் I**

| | | |
|---|---|---|
| 1. வரி மதிப்பீடுக்கு உட்படும் நபரின் பெயர் (உறுதியளிப்பவர்) | 2. வரி மதிப்பீடுக்கு உட்படும் நபரின் பான் நம்பர் | 3. பிறந்த தேதி (DD / MM / YYYY)[2] |
| 4. முந்தைய ஆண்டு (பி.ஒய்.)[3] (உறுதிமொழி அளிக்கப்படும் ஆண்டு) | 5. ஃப்ளாட்/ டோர்/ பிளாக் நம். | 6. கட்டிடத்தின் பெயர் |

| | | | |
|---|---|---|---|
| 7. சாலை/ தெரு/ லேன் | 8. ஏரியா/ பகுதி | 9. ஊர்/ நகரம்/ மாவட்டம் | 10. மாநிலம் |
| 11. பின்கோடு | 12. மின்னஞ்சல் | 13. தொலைபேசி எண் (எஸ்டிடி கோடு உடன்) மற்றும் மொபைல் நம்பர் | |

14. (ஏ) வரிக்காக மதிப்பிடப்பட்டதா:[5] ஆமாம் ☐ இல்லை ☐ (பி) ஆமாம் எனில், சமீபத்திய மதிப்பீடுக்கு உட்பட்ட ஆண்டு

| | |
|---|---|
| 15. இந்த உறுதிமொழி அளிக்கப்படுவதற்கான உத்தேச வருமானம் | 16. முந்தைய ஆண்டில் உத்தேசிக்கப்பட்ட மொத்த வருமானம் அதில் பத்தி 15ல் 6ம் எண்ணுக்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வருமானம் உட்படுத்தப்பட வேண்டும்[6] |

17. முந்தைய ஆண்டுக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ள இதர ஏதேனும் படிவம் தவிர, சமர்ப்பிக்கப்பட்டுள்ள படிவம் எண் 15எச்-ன் விபரங்கள்.[7]

| | |
|---|---|
| படிவம் எண் 15எச்-ன் மொத்த எண்ணிக்கை | தாக்கல் செய்யப்பட்டுள்ள படிவம் எண் 15எச்-ன் கீழ் ஒட்டுமொத்த வருமான தொகை |

18. தாக்கல் செய்யப்பட்டுள்ள உறுதிமொழிப்படி வருமானத்தின் விபரங்கள்

| வரிசை எண் | சம்பந்தப்பட்ட முதலீடு/ கணக்கு முதலியவற்றின் அடையாள எண்[8] | வருமானத்தின் தன்மை | எந்தப் பிரிவின் கீழ் வரி கழிக்கப்படுகிறது | வருமான தொகை |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

____________________

உறுதிமொழி அளிப்பவரின் கையெழுத்து[9]

**உறுதிமொழி/சரிபார்த்தல்**[10]

வருமான வரிச் சட்டம் 1961-ன் பிரிவு 6-ன் பொருளுக்குள்ளாக நான் இந்தியாவில் வசிப்பவன் என்று ____________________ ஆகிய நான் இதன் மூலம் அறிவிக்கிறேன். எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்குப் புலப்பட்ட வரை மேலே சொல்லப்பட்டவை சரியானவை, முழுமையானவை மற்றும் உண்மையாக சொல்லப்பட்டவை என்றும் மற்றும் இந்தப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வருவாய்கள் வருமான வரிச் சட்டம் 1961-ன் 60 முதல் 64 வரையான பிரிவுகளின் கீழாக வேறு எந்த நபரின் மொத்த வருமானத்தில் சேர்க்கத் தக்கதல்ல என்று நான் இதன் மூலம் அறிவிக்கிறேன்.

__________ மதிப்பீட்டு ஆண்டு தொடர்பான __________-ல் முடியும் முந்தைய ஆண்டுக்கான வருமான வரிச் சட்டம் 1961-ன் விதிமுறைகளின்படி கணக்கிடப்பட்டு பத்தி 17-ல் குறிப்பிடப்பட்ட *வருவாய்/ வருவாய்களின் மொத்தத் தொகைகள் மற்றும் பத்தி 15-ல் குறிப்பிடப்பட்ட *வருவாய்/ வருவாய்கள் உட்பட மதிப்பிடப்பட்ட எனது மொத்த வருவாய் மீதான வரி என்று மேற்கொண்டு நான் இதன் மூலம் அறிவிக்கிறேன்.

இடம்: ____________________

தேதி: ____________________

____________________

உறுதிமொழி அளிப்பவரின் கையெழுத்து

பாகம் II

**ீபகுதி 1ல் பத்தி 16ல் குறிப்பிடப்பட்டுள்ள வருமானத்தை செலுத்துவதற்கு பொறுப்பான நபரால் பூர்த்தி செய்யப்பட வேண்டும்சி**

<table>
<tr><td colspan="3">1. செலுத்தப் பொறுப்பான நபரின் பெயர்</td><td colspan="2">2. தனிப்பட்ட அடையாள எண்[11]</td></tr>
<tr><td>3. செலுத்துவதற்கு<br>பொறுப்பானவரின் பான் நம்பர்</td><td colspan="4" rowspan="2">4. முழு முகவரி</td></tr>
<tr><td>5. செலுத்துவதற்கு பொறுப்பான<br>நபரின் டேன் நம்பர்</td></tr>
<tr><td colspan="2">6. மின்னஞ்சல்</td><td colspan="2">7. தொலைபேசி எண் (எஸ்டிடி கோடு உடன்)<br>மற்றும் மொபைல் நம்பர்</td><td>8. செலுத்திய மொத்த தொகை[12]</td></tr>
<tr><td colspan="2">9. உறுதிமொழி பெறப்பட்டுள்ள தேதி (நாநா/மாமா/வவவவ)</td><td colspan="3">10. வருமானம் செலுத்தப்பட்டுள்ள/ வரவு<br>வைக்கப்பட்டுள்ள தேதி (நாநா/மாமா/வவவவ)</td></tr>
</table>

இடம்: ____________________

தேதி: ____________________

____________________
பகுதி I-ல் பத்தி 16ல் குறிப்பிடப்பட்டுள்ள வருமானத்தை
செலுத்துவதற்கு பொறுப்பான நபரின் கையெழுத்து

*உரித்தாகாத எதையும் நீக்கி விடுங்கள்.

1. பிரிவு 206ஏஏ (2)ன் விதிகளின்படி, உறுதிமொழி அளிப்பவர் அவரது உரிய நிரந்தர கணக்கு எண்ணை (பான் நம்பர்) வழங்கத் தவறினால், பிரிவு 197ஏ(1) அல்லது 197ஏ (1ஏ) கீழ் அளிக்கப்படும் உறுதிமொழி செல்லுபடி ஆகாது.

2. முந்தைய ஆண்டின்போது எந்த நேரத்திலும் 60 வயது அல்லது அதற்கு அதிக வயதுள்ள இந்தியாவில் வசிக்கும் தனிநபர்கள் அறிவிப்பை வழங்கலாம்.

3. வருமானம் சம்பந்தப்பட்டுள்ள நிதி ஆண்டு

4. வருமான வரிச் சட்டம், 1961ன் பிரிவுகளின் கீழ் வரிக்காக மதிப்பீடுக்கு உட்பட்டால், உறுதிமொழி தாக்கல் செய்யப்பட்ட ஆண்டிற்கு முந்தைய ஆறு மதிப்பீட்டு ஆண்டுகளில் ஏதேனும் ஒரு மதிப்பீட்டு ஆண்டில் ‘ஆமாம்’ எனக் குறிப்பிடுங்கள்

5. உறுதிமொழி தாக்கல் செய்யப்பட்ட முந்தைய ஆண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த வருமானத்தின் அளவை தயவுசெய்து குறிப்பிடுங்கள்.

6. படிவம் எண். 15எச்-ல் ஏதேனும் உறுதிமொழி (கள்) முந்தைய ஆண்டில் இந்த உறுதிமொழியை தாக்கல் செய்வதற்கு முன் தாக்கல் செய்யப்பட்டிருந்தால், அத்தகைய படிவம் எண். 15எச்ன் மொத்த எண்ணிக்கையையும் மற்றும் அதோடு தாக்கல் செய்யப்பட்ட அந்த உறுதிமொழியில்(களில்) உள்ள வருமானத்தின் மொத்தத் தொகையையும் குறிப்பிடுங்கள்.

7. ஷேர்களின் தனிப்பட்ட எண், டெர்ம் டெபாசிட், ரெக்கரிங் டெபாசிட் தேசிய சேமிப்பு திட்டங்கள் ஆகியவற்றின் கணக்கு எண், ஆயுள் காப்பீட்டு பாலிசி நம்பர், எம்ப்ளாயீ கோடு முதலியவற்றை குறிப்பிடுங்கள்.

8. உறுதிமொழி/ சரிபார்த்தல் இவற்றில் கையெழுத்திடும் முன், உறுதிமொழி அளிப்பவர் அவரால் அளிக்கப்படும் தகவல் இந்த படிவத்தில் அனைத்து விஷயங்களிலும் உண்மையானவை, சரியானவை, மற்றும் முழுமையானவை என உறுதி செய்து கொள்ள வேண்டும். உறுதிமொழியில் பொய்யான தகவலை அளிக்கும் எந்த ஒரு நபரும் வருமான வரிச்சட்டம் 1961 பிரிவு 277ன் கீழ் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார் மற்றும் அவ்வாறு தண்டனை விதிக்கப்படும் பட்சத்தில் கீழ்க்கண்டவாறு தண்டனை விதிக்கப்படும்.-
   (i) இருபத்து ஐந்து லட்சங்களுக்கும் மேல் வரி ஏய்ப்பு செய்யப்பட்டிருந்தால் கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்படும், அது ஆறு மாதங்களுக்கு குறையாமல் ஆனால் ஏழு ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படலாம் மற்றும் அபராதமும் விதிக்கப்படும்.
   (ii) எந்த இதர விஷயத்திலும், கடுங்காவல் மூன்று மாதங்களுக்கு குறைவாக இருக்கலாம் ஆனால் இரண்டு ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படலாம் மற்றும் அபராதமும் விதிக்கப்படும்.

9. பகுதி 1 இன் பத்தி 16ல் குறிப்பிடப்பட்டுள்ள வருமானத்தைச் செலுத்துவதற்குப் பொறுப்பான நபர், நிதியாண்டின் காலாண்டில் அவர் பெற்ற அனைத்து படிவம் எண் 15எச்- க்கும் தனிப்பட்ட அடையாள எண்ணை ஒதுக்கி, இந்த விபர எண்ணை அதில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களுடன் தெரிவிக்க வேண்டும். வருமான வரி விதிகள், 1962 இன் விதி 31எ(4) (vii) கீழ் அதே காலாண்டில் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை தெரிவிக்க வேண்டும். மேலும் அந்த நபர் அதே காலாண்டில் படிவம் எண்.15ஜி-யைப் பெற்றிருந்தால், படிவம் எண் 15எச் மற்றும் படிவம் எண் 15 ஜி-க்கான தனி வரிசை எண்ணை ஒதுக்குங்கள்.

10. பகுதி 1ன் பத்தி 15 ல் குறிப்பிடப்பட்டுள்ள வருமானத்தைச் செலுத்துவதற்குப் பொறுப்பான நபர், பிரிவு 197ஏன் துணைப் பிரிவு (1) அல்லது துணைப் பிரிவு (1ஏ) அல்லது மொத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வருமானத்தின் தன்மை அளவு அத்தகைய வருமானம் சேர்க்கப்பட வேண்டிய முந்தைய ஆண்டில் வரவு வைக்கப்பட்ட அல்லது செலுத்தப்பட்ட அல்லது வரவு வைக்கப்படும் அல்லது செலுத்தப்படக்கூடிய வருமானத்தின் அளவுகள் வரி விதிக்கப்படாத அதிகபட்சத் தொகையை தாண்டியுள்ளது எனில், உறுதிமொழியை ஏற்க மாட்டார். தகுதியைத் தீர்மானிப்பதற்கு, பத்திகள் 15 மற்றும் 17ல் உறுதிமொழி அளிப்பவரால் தெரிவிக்கப்படும் வருமானம் அல்லது வருமானத்தின் மொத்தத் தொகையை அவர் சரிபார்க்க வேண்டியது அவசியம்.